1169

1169.

24 JUN 1936
MADRAS

Register No. 2188.

உ
ஓம் தத்ஸத்.

சமரசம்.

ஓர் தமிழ் மாத வெளியீடு.

சர்வ சமய சமரச சன்மார்க்க சதாச்சாரம்.

சமரஸச் செல்வி | வைகாசி ஆனி May & June 1936. | வயது 2 மாதம் 3

பொருளடக்கம். பக்கம்

1.	கடவுளை காணும் வழி	39
2.	சமரஸ கோர்ட்	40
3	சமூக அறிவு ஜன நிர்மாணம்	42
4.	முத்துமாலை	46
5.	துப்பறியும் பகுதி	53
6.	தத்துவ விளக்கம்	54
7.	வணிகத்தொழில்	49
8.	சங்குத்தொனி	50
9.	கிராம நிர்மாணம்	48
10.	சாமிக்கா பலியா	62
11.	சுகாதாரம்	55

Edited & Published by :—
M. A. Varadaraja Mudaliar.

PRINTED AT THE S. R. V. PRESS, VILLUPURAM.

கீழ்கண்ட ஏஜண்டுகளிடம் சந்தா தொகையை
செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளவும்.

1. திரு. ருத்திரப்ப முதலியார் அவர்கள்,
ரெயில்வே பென்ஷன் ஆபீஸர், விழுப்புரம்.

2. ,, முத்துகுமரசாமி பிள்ளை, அவர்கள்
சிவானந்தபுரம் கூடலூர்.

3. ,, D. ஸ்ரீராமலு நாயடு, அவர்கள்
கண்டிராக்டர் தென்கோபுரவீதி
விருத்தாஜலம்.

4. ,, பம்பாய் தேசிங்கு, அவர்கள்
கள்ளக்குறிச்சி

5. ,, சோமசுந்தரம் பிள்ளை, அவர்கள்
புதுப்பாளையம்.

ஆயுள் சந்தாதார்கள்.

1. திரு. S. M. சொக்கலிங்க உடையார், அவர்கள்
மிராசுதார் எடைக்கல்.

2, ,, N. கோவிந்தராஜலு நாயடுகாரு,
கண்டிராக்டர், விழுப்புரம்.

3. ,, நாராயண ரெட்டிகாரு,
மிராசுதாரர் பகண்டை.

4. ,, தயாளு ரெட்டிகாரு,
மிராசுதாரர் மாடாம்பூண்டி.

5. ,, T. இளையாப் பிள்ளை,
நாட்டாண்மை வடக்கநந்தல்.

6. ,, இராமலிங்க உடையார்
மிராசுதார், பனப்பாடி.

ஓம் பரப்பிரமணே நம:

மிகப் புதியது { சமரஸம் } மிகப் பழையது

செயற்பால தோருமறனே யொருவன்
குயற்பாலதோரும் பழி— குறள்

சமரஸச் செல்வி } June ஆனி 1936 { வயது 2 மாதம் 3

கடவுளை காட்டுகிறேன் வாருங்கள்!

ஓர் பூங்காவனத்தில் நாம் புகுந்து பார்ப்போமா? பூஞ் சோலைகளின் வனப்புகள் கண்ணைக்கவர்கின்றன. புஷ்பங்களின் பலவிதமான வர்ண உருவ வேற்றுமைகள் மனதைக்கவர்கின்றன. அதன் நறுமணமோ பஞ்சேந்திரியங்களுக்கும் இன்பத்தை விளை விக்கின்றன. ஒவ்வொரு செடியின் உருவமைப்பும், அதன் சோலைகளின் சாயலும் குருத்துகளின் விந்தையும் காட்சியிலும் கண்காட்சியே. நாளைக்கு பூக்கும் புஷ்பம் இன்றைக்கு இந்த செடியில் எந்த இடத்திலிருக்கிறது; அதன் பருமன், நிறம், உரு வம் எங்கு மறைந்திருக்கின்றது! ஓ! ஓ!! ஏதோ ஓர் சக்தி அத னிடம் குடிகொண்டிருக்கிறது. அதுதான் இயற்கை சக்தி. அந்த இயற்கை சக்தி எதிலிருந்து வெளித்தோன்றுகிறது? ஓர் ஏழை மனிதனின் திரேக உழைப்பிலிருந்தே. இதற்கு செயற்கை சக்தி யென்றுபெயர்.

எனவே இயற்கை சக்தியின் ஆற்றலையும், செயற்கை சக்தி யின் உழைப்பையும் ஆட்டிவைக்கிறவர்யார்? அவர்தான் கடவுள். நாம் கடவுளை காணவேண்டின் அவரின் சக்தியை வெளிப்படுத்து வதற்கு காரணமான தொழிலாளியின் உழைப்பை மதித்து அவர் களுக்கு பேருதவி செய்வதே கடவுளுக்கு நாம் செய்யவேண்டிய கைம்மாறு. அவர்களிடம் நன்றியுள்ளவனாயிருப்பதே கடவுளுக்கு நாம் செய்யும் தொண்டு.

சமரஸ கோர்ட்

(4ம் பக்கத் தொடர்ச்சி.)

மலைமன்னர்:- நாங்கள் பார்க்கவகுலத்தை சேர்ந்தவர்கள். நாங்கள் மலைமன்னர், நத்தமன்னர், சுதர்மன்னர் என மூவகையினராய் பிரிந்துள்ளோம். பாளையப்பட்டு (குருநிலமன்னர்) களாய் நிலவி மக்களை ஆண்டுவந்திருப்பதால் எங்களுக்கு மன்னர் பட்டம் இயற்கையாயுள்ளது கௌர்வமும், பெருமையுமே எங்கள் குலதர்மம்.

ரெட்டியார்:- இரெட்டியார். வாக்கு பிசகாதவர்கள். ஒர் முறை செய்த வாக்குறுதிகளை மறுக்காதவர்கள் தர்மசீலர்கள். இருபோக்காளர்களல்ல. சத்தியம் காப்போர். க்ஷத்திரியர் தர்மங்களையும் தொழிளாளிகளுடைய உரிமைகளையும் நாளைக்கு நாளைக்கு என்று இரட்டிக்காமல் உடனே செய்பவர்கள்.

இடையர்:- முற்காலத்தில் மருதநிலம் முல்லைநிலம் குறிஞ்சிநிலம் மூன்றுஇடங்களிலும் நாங்கள் முல்லைநிலத்து வசித்து பசுக் காத்துவந்தோம் சாக்ஷாத் கண்ணபிரான் எங்கள் தொழிலை விரும்பி எங்கள் குலத்தில் உதித்து கோபாலன் என பெயர்தாங்கி எங்கள் தொழில் புரிந்துள்ளனர். நாங்கள் பல ஜாதியார்களைப் போல் நாகரீகத்தில் வேகமாய் ஒடி முறிந்து விழுவதுமில்லை. நாகரீக சூன்யமாயுள்ள கீழ்மக்களைப்போல் நடித்துகாட்டுவதுமில்லை என்றைக்கும் ஒரேநிதானமாக தர்மத்தையும் கௌர்வத்தையும் தாங்கியவர்கள் இதனல் இடையர் நடுநிலமையானவர்கள் என்பது பொருள்.

செம்படவர்:- செம்மையான படைகள் என்பது பொருள். எங்களை சிவபடாள் என்றுச் சொல்வதுண்டு சொக்கநாதர் மீனாக்ஷியை மணந்தகாலத்தில் நாங்கள் சிவபெருமானுககு உற்றபடைவீரர்களாய் நிலவியிருந்தோம்.

அம்பட்டன்-: அம்+பட்டன் அழகை தீட்டுகிறவன். சித்திரக்காரன். நாங்கள் மனிதர்களை குரங்கினத்திலிருந்து பிரித்து காட்டுகிறோம் மூவேந்தர்காலத்தில் சமாச்சாரங்கள் தபால்

கொண்டுசேர்ப்பதற்காக நாங்களே குதிரை நடத்திசெல்வதுண்டு அதனால் பரியேரி என்றும் பட்டமும் உண்டு. வயித்தியம் செய்வதால் பண்டிதன் என்றும், புழலூதுவதால் நாவிதன் என்றும் பட்டங்களும் எங்களுக்கு உண்டு.

வக்கீல்வியாக்கியானம்:- ஆதி இந்துக்கள் தாங்களே ஈஸ்வரசிருஷ்டியில் முதல் உதித்தவர்களென பெருமைபாராட்டுகிறார்கள். படையாச்சிகள் தாங்களே க்ஷத்திரியர்களென்றும் பிரும்மணர்கள் என்றும் சொல்லுகிறார்கள். தேவாங்கா தேவாங்க பிரும்மணாள் என்று சொல்லுகிறார்கள். மகாராஷ்டிராள் (பட்டுநூல்காரர்) மகாராஷ்டிர பிராம்மணாள் என்று சொல்லுகிறார்கள். சைவாள் பிராம்மணர்களை விட மேலானவர்களென்றும் சொல்லுகிறார்கள். மொத்தத்தில் கல்வி வாசனையில்லாமல் தூங்கிக்கொண்டிருக்கும் ஜனங்கள் தவிர மற்றவர்களெல்லாம் தாங்களே பெரியவர்களென சொல்லிவருகிறார்கள். ஆகையால் கோர்ட்டார் தீர்ப்பு கோரப்படுகிறது.

கோர்ட்டார் தீர்ப்பு :- இதுவரையில் சொல்லிக்கொண்டு வந்த விஷயங்களை கூர்ந்து கவனித்தால் மனிதனாய் பிறந்த ஒவ்வொருவரும் உயர்ந்தவர்களென தெரிகிறது. ஜாதிகளில் உயர்ந்த ஜாதியானெனவும் தாழ்ந்தஜாதியானெனவும், மாறுபாடு சிறிதுமில்லை. எந்த ஜாதியானாயிருந்தாலும் அவனது திரேக சுத்தம், மனோசுத்தம், நற்செய்கை, சன்மார்க்கம், ஈகை, குணம் முதலியவைகளால்தான் மனிதர்களுள் உயர்வு தாழ்வு உண்டாகிறது. பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் சிறப்பொக்கும் செய்தொழில் வேற்றுமையால்— என்றபடி வாயினாலும் சாயக்காலினாலும் தான் தான் பெரியவனென்று சொல்லிக்கொள்ளாமல் நற்செய்கையினால் காண்பிக்க முன்வரல்வேண்டும். மனிதர்களில் பெரியவர்களென பெயர்பெறவேண்டுமானால் மனிதர்களுக்கு ஊழியம் செய்யவேண்டும். தனக்குள்ளதை பாகித்து மற்ற உயிர்களுக்கும் கொடுக்கவேண்டும் ஜாதிகள் உருவத்தால் ஆண் ஜாதி பெண் ஜாதி என்று காணப்படுகிறது. ஈகையினால் இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர் என வகுக்கப்படுகிறார்கள்.

ஜன நிர்மாணம்

(16-ம் பக்கத் தொடர்ச்சி.)

மேல் நாடுகளில் பெரும்பாலும் சாமிச்சிலவே ஓர் சிறிதும் கிடையாதென சொல்லலாம். எல்லா ஜனங்களுக்கும் சௌகரியமாகவும், உல்லாசமாகவும் வீற்றிருந்து ஆண்டவனை தொழுவதற்கேற்ற முறையில் திருப்பணி செய்கிறார்கள். அந்த கட்டிடத்தில் கோவில்களில்லாதபோது பள்ளிக்கூடங்களுக்கும் வேறு பல பொது நன்மைக்கும் உபயோகப்படும்படி யூகித்து கட்டுகிறார்கள்.

கோவில்களில் மூன்றுவிதமான விஷயங்கள் நடைபெறுகின்றன. அவரவர்கள் செய்த பாவங்களை அறிக்கைசெய்து மன்னிக்க மன்றாடுதல் ஓர் பகுதி. 2 ஆண்டவன் அவரவர்களுக்கு செய்த பேருபகாரத்திற்காக நன்றி பாராட்டு முறை ஒன்று மூன்றுவதாக ஆத்ம சாந்திக்காக பெரியோர்களால் உபதேசம் பெறுவதுமாகும்.

போதுவுடமை:- மூலதனம் இதற்கு திக்கற்ற சொத்துக்கள் தலைக்கட்டு வரி, அபாரதத்தொகைகள், அநாதை சொத்துக்கள் இவைகளை சர்க்கார் ஆலோசனைக்குட்படுத்தி பெற்றுக்கொள்ளல் சன்மானம் முதலியவைகள். சர்க்கார் கிராண்டுகள். இதினின்று மேல்நாட்டில் சிறந்த தர்மம் நடைபெறுகின்றன.

பரிபாலனம்:- இந்த தொகையைக்கொண்டு அவர்கள் சமய பள்ளிக்கூடங்கள், கைம்பெண்கள் சரணாலயம், கன்னிமாடங்கள் கைத்தொழில் சாலைகள், ஔஷதாலயங்கள், ரணவயித்தியம் நோய் வராமல் தடுக்கும் பாதுகாப்பு சங்கங்கள். ஊமை, குருடு செவிடுகளுக்கு கல்விச்சாலைகளும் தொழில்சாலைகளும், அநாதை பிள்ளைகளுக்கு அநாதையாலயங்களும் ஏற்படுத்தி பொது ஜனங்களுக்கு உதவி செய்கிறார்கள்.

மனிதன் உலக விகாஸ முறையில் ஹீனஸ்தியையடைந்திருந்தபோதிலும் அவன் கௌரவமானவன் அவனை கைதூக்கிவிட வேண்டியது மற்றவர்கள் கடமை. அவன் உயர்ந்த பெருமைக்குடையவனென்பது அவர்களின் நோக்கம்.

நம் நாட்டில் சமயமணம் ஒருவாறு இருந்தாலும் சமூக பிரச்சினை வெகு மோசமாக இருக்கிறது. காரணம் சமூக சங்கங்கள் போதுமான மூலதனத்தோடு ஆரம்பிக்கப்படுவதில்லை இந்நாட்டின் மௌடீக ஜனங்களெல்லாம் ஏராளமான பொருள்களை சாமிச்சிலவில் ஈடு செய்கின்றனர். கோவில் பெயரிலேயே ஏராளமான திரவியங்களும் மான்யங்களும் சேர்த்துவிடுவதில் ஊக்கமாயிருக்கிறார்கள். பொது ஜனங்களின் பணத்தைகோவில் விவகாரங்கள் தவிர இதர சமுதாய விஷயங்களில் சிலவிடுவதில்லை. அந்த தர்மம் சரிவர நடவாத ஏதாவது அதனை வேறு தர்மங்களுக்கு உபயோகிக்கும் பாகுபாடுகளும் கிடையாது இம்மாதிரி கோவில்களும், சத்திரங்களும், பஜனைக்கூடங்களும் மடாதிபதிகளிடம் ஏராளமான பொருள்களும் துர்வினியோகமாக்கப்படுகின்றன. இது போனதுபோக வருஷாவருஷம் உற்சவத்திற்காகவும், மாதக்கட்டளைக்காகவும் பணம் சேர்ப்பதற்கு அரும்பாடு படுகின்றனர். போதாதகுறைக்கு கோவில் லாட்ரியென்று லக்ஷம் லக்ஷமாக நவீன அறிவாளிகள் பொருள் சேர்ப்பதில் ஈடுபட்டிருக்கின்றனர் கிராமங்களிலுள்ள மௌடீக பணக்காரர்கள் பணம் மிகுந்தவுடன் அளவுக்கு மிஞ்சிய கோவில் திருப்பணிகளில் ஈடுபடுகிறார்களேயொழிய, வேறு தர்மங்களை தெரிந்துக்கொள்ளவும் செய்யவும், அவகாசம் கிடையாது. சமூக தர்மங்கள் ஏதேனும் தற்பொழுது நடைபெற்றுவந்தால் அது சர்க்கார் உதவியால்தானென்பது திண்ணம்.

சர்க்காரே எல்லாவித தர்மங்களையும் செய்துவிட சமூகத்தார் விட்டுவிடுவது மிகவும் சிக்கலான காரியம். சகலபாரமும் சர்க்காரை சேர்ந்ததென மக்கள் வாளாயிருப்பதனுல் மகத்தான கஷ்டமேற்படுகின்றது அந்த கஷ்டத்தை ஒவ்வொருவரும் பாகித்துக் கொள்ளவேண்டும் புதிய நாகரீகப்படி ஒவ்வொரு கிராமத்திலும் பத்திரிகைகளை ப்டிக்கும்படி மக்களை பரிபக்குவப்படுத்துவதே ஜனநிர்மாணத்தின் முதல்படியாகும். ஜனுங்கத்தை கட்டுப்பாடாகவும் ஜவாப்தாரியான முறையில் நடத்துவதே ஜனநிர்மாணத்தின் முக்கிய நோக்கம். ஜனுங்கத்தை நிர்மாணம் செய்கையில் அவரவர்க்குரிய தொழின் முறைக்கு தக்கபடி பல

பிரிவாக பிரித்து அந்தந்த பிரிவுகளுக்கு ஓர் சங்கம் ஸ்தாபித்து அதன் யோசனைக்கும் விதிகளுக்கும் கட்டுப்பட்டு அங்கத்தினர் நடந்துவரல்வேண்டும். இந்த முறைகளை முதல் முதல் தாலுக்கா பிர்க்கா டவுன்களில் ஆரம்பிக்கலாம்.

இந்நாட்டில் பலவித வசதிகளிருப்பினும் இவ்வித உயர்ந்த ஜன நாயக முறையில்லாததினாலேதான் நம்மக்களிடை வறுமை தாண்டவமாடுகிறதென உண்மை மக்கள் ஆழ்ந்து உணரவேண்டும். இதனால் உண்டாகும் நன்மைகள் பல.

அந்தந்த தொழின் முறைக்கு ஏற்றபடி பலவித உபாயங்களை எடுத்து சொல்லுவது. 2. யோக்கியன் அயோக்கியன் என்பதை நன்குணர வசதிகளிருக்கின்றன 3 பணக்காரன், ஏழை என்பதையறிந்துக்கொண்டு அதற்குத்தக்கபடி தொழில் கொடுக்கவும் உத்தியோகங்களுக்கு சிபார்சு செய்யவும் கூடும். 4. அறிவாளிகளுக்கும், வேலையில் திறமைவாய்ந்தவர்களுக்கும் கௌரவமளிக்கும். 5. பொருளாதார சமநிலைக்கு வீதிவிளக்குகளை ஏற்படுத்தலாம். 6 ஜனங்களுடைய க்ஷேமலாபங்களில் ஈடுபட்டு அக்கரையோடு உழைக்கிறவர்களிருக்கிறார்கள் என்பதை ஜனங்களறிந்துக்கொண்டால் அவர்களுக்கு ஓர் பெருந்தைரியமும் உற்சாகமும் முகங்களில் தோன்றும். 7. சந்தேகம் ஒழியும், பயமும் நீங்கும். இதன் மாய்கையால் விளையும் சுயநலம் மறையும் 8 ராஜாங்கத்தாருக்கு மக்களிடையுள்ள ஊழல்களை அறிவிக்கவும் மக்களுக்கு வேண்டிய சௌகரியங்களுக்காக தெரிவிக்கும் ஸ்தாபனமாக நிற்கும். 9 மக்கள் வாழவேண்டியதற்குற்ற மூலதர்மங்களை போதிக்கவும், நிறைவேற்றவும் அடிகோலும். 10 ஞானத்திலும் கல்வியிலும் மக்களை நடத்துதற்கு வழிகாட்டியா யிருக்கும். இவைபோன்ற பலவித நலனுரிமைகளுக்கு சாதகமாய் இருக்கும். பொதுப்பட கூறின் கிறிஸ்து மதத்தில் மிஷனெரிகள் மக்களை சமய சமூக வாழ்க்கையில் எவ்வாறு பழக்குவிக்கிறார்களோ அவ்வாறு நம் நாட்டவரையும் பழக்குவித்தல் வேண்டுமென்பதே எமது உள்ளக் கிடக்கை. இதைப்பற்றி தொடர்ந்து ஆயிரம்பக்கங்களுக்குமேல் எழுதி வெளியிடுவோம்.

சங்க பாகுபாடு:- ராஜாங்கம் எப்படி பல பிரிவுகளாக சர்க்கார் பரிபாலனத்தைப் பாகித்துக்கொண்டு ஆள்கிறார்களோ அப்படியே ஜன நாயக முறையிலும் கூடியவரையில் 9 பாகங்களாக பிரித்துக்கொண்டு சீர்ப்படுத்தலாம். அவை விவசாயிகளின், சங்கம் 1, 2. வியாபார சங்கம், 3. கைத்தொழிலாளர் சங்கம். 4. தொண்டர் படை சங்கம். 5 தர்ம பரிபாலன சங்கம் 6. சுகாதார வத்திய சங்கம். 7. சிற்ப தொழில்சங்கம். 8 நீதி விசாரணை சங்கம். 9. வாத்தியம், நடனம், ஆட்டம் முதலிய சங்கீத சங்கம். முதலிய சங்கங்கள் முதலில் தாலுக்கா டவுன்களிலும் யூனியன் டவுன்களிலும் நிருபவேண்டும் ஒவ்வொரு சங்கமும் 1000 ஆயிரம்பேரை அடங்கிய கூட்டமாயிருத்தல் அவசியம். ஒவ்வொரு நபரும் வருஷம் 1க்கு 4 அணா சந்தா செலுத்திவரவேண்டும். ஒவ்வொரு சங்கத்திற்கும் ஓர் அக்கிராசனாதிபதியும் நிர்வாக அங்கத்தினர்களுமிருக்கவேண்டும் இது ஒவ்வொரு (வக்கீல்) நியாயவாதியின் அக்கிராசனத்தின் கீழ் நடைபெறவேண்டும். அல்லது சிறந்த அறிவாளிகளால் நடத்தப்படவேண்டும். வக்கீல்களெல்லாம் தேச சேவைக்கும் ஜன நாயக பரிபாலனத்திற்கும் திரும்பிவிடவேண்டும் அவர்கள் மேனாட்டு மிஷனரிகளைப்போல ஜனங்களை நடத்திச்செல்லவேண்டும்.

மீட்டிங்குகள்:- மாதம் ஒருமுறை கூட்டம் கூடி ஆலோசிக்கவேண்டும். தலைமை வகிப்பவருக்கு குறைந்தது 5 ரூபாய் முடிப்பாவது ஆரம்பத்தில் கொடுக்கலாம். மற்ற நிர்வாகிகளுக்கு சாதாரண சம்பளம் கொடுக்கலாம். பிறகு ஒழுங்கு ஏற்பட்டு தலைவர்கள் சங்கத்தின் முன்னேற்றத்திற்காக உழைப்பதாக ஜனங்கள் தெரிந்துக்கொண்டால் 20 ரூபாய் வரைக்கும் வெகுமதியாக பிரதி கூட்டத்திற்கும் கொடுப்பது. சம்பளமில்லாமலும் ஏதேனும் ஊதியமில்லாமலும் எவரையும் பாடுபடும்படி அழைக்கக் கூடாதென்பதே மேனாட்டாரிடம் கற்றுங்கொள்ளவேண்டிய உபதேசமாகும். சம்பளமில்லாமல் தர்மம் தர்மமென்று நடைபெறுவதால்தான் ஸ்தாபனம் நீடித்து நிற்பதில்லை. ஆரம்பத்தில் வருவாயுக்கு தக்கபடி சுவல்ப ஊதியம்பெற்று உழைக்கவேண்டும்.

பிறகு வருவாயுக்கு ஏற்றபடி எல்லாருக்கும் தொழில்கள் லாபகரமாகவும் ஒழுங்காகவும் நடைபெற்றால் பிரதி வருஷமும் 2 அணு அதிகப்படி சந்தா ஏற்படுத்தி பிறகு 1 ரூபாய் வரைக்கும் ஓர் அங்கத்தினரிடமிருந்து வரி வசூலித்துக்கொள்ளலாம். இந்த தனி வரியை நிர்வாக அங்கத்தினர்முதல் சகலரும் கொடுத்துவர வேண்டும். இது தவிர தர்மவசூல் என்பது பணக்காரர்களிடத்திலும் சௌகர்யமுள்ளவர்களிடத்திலும் வசூல் செய்து பண்டில் சேர்த்துக்கொள்ளலாம். இந்த தொகைகளை கோவாபரேடிவ் பாங்கியில் கட்டிவிடவேண்டும். மாத மாதம் செலவை குறிப்பிட்டு மீட்டிங் பாஸ் செய்து பிறகு அந்த தொகையை மாத்திரம் பாங்கியில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். இதைப்பற்றி பூர்த்தியாக பின் விவரிக்கலாம்.

நோக்கங்கள். ஒவ்வொரு சங்கமும் ஜனங்களை சீர்திருத்தி ஞானமயமாக்குவதல்லாமல் சர்க்காருக்கு விரோதஸ்தாபனமாக கருதப்படாமல் சர்க்காருக்கு இருந்துவரும் கஷ்டத்தை நீக்குவதற்கே என்று உணரல் வேண்டும். பொது ஜனங்களின் நல்வாழ்வே எல்லாருடைய கஷ்டங்களுக்கும் பரிகாரம் என்பதை எவ்வுயிரும் ஆழ்ந்து சிந்திக்கவேண்டும்.

முத்துமாலை

எல்லாவுயிர்க்கும் உதவி செய். எல்லாரிடத்திலும் அன்பாய்நட.
லோபித்தனத்தைவிட பகிர்ந்துண்பது சகோரத்தன்மையாகும்.
இட்டு வாழ்வதும், இரககமும் இகபரமிரண்டிற்கும் நெறியாகும்.
பலமுள்ளவனும் உண்மையாளனும் இப்படி நடப்பான்.

சிறுவர்களுக்கு உதவிசெய் அவர்களிடத்தில் அன்பாயிரு.
எதிர்காலத்து மக்களுக்கு நன்மை பயக்கும். நற்பிரஜைகளாகும்.
இளமையிலேயே நல்ல விஷயங்களை அறிந்துகொள்ளவும் நற்கா
[ரியங்களை செய்யவும் அவர்களுக்கு நடந்துகாட்டு.
இளமனதை பாழ்படுத்தி ஒழுங்கீனமாய் நடக்க தூண்டாதே.

வாலிபர்களுக்கு உதவி செய். அவர்களிடம் அன்பாய்நட. அவர்கள் நாள்தோறும் உழைத்து பல உயிர்களை காப்பாற்ற
[வேண்டியவர்களாயிருக்கிறார்களே.
அவர்களுக்கு இணங்கு. அவர்கள் தொழிலுக்கு உதவி செய். பலவித கஷ்டங்களை தாங்கும் மனது புண்பட நடக்காதே.

வயது சென்றவர்களுக்கு உதவிசெய். அவர்களிடம் உன் அன்பை செலுத்து. அவர்களின் உற்சாகமானகாலம் மறைந்துவிட்டது. சாகும்காலம் சமீபித்து விட்டது. உலக கஷ்டங்களால் முறியடிக்கப்பட்டு தளர்ந்த மனதை கஷ்டப்படுத்தாதே. சாந்தமாகவும். சுகமாகவும் காலத்தை கழிக்க தொந்திரவின்றி விட்டுவிடு.

ஏழைகளுக்கு உதவி செய் அவர்களுக்கு உன் அன்பை வழங்கு. அவர்கள் உழைப்பிலும் பொறுமையிலிருந்தே உலகம் ஜீவிக்கிறது. அவர்கள் பொருளை பறிக்கவும், மோசஞ்செய்யவும் கூலியை குறைக்கவும் முற்படாதே. ஏன்? உன்னோடு எதிர்த்துக் கொள்ள அவர்களுக்கு சக்தியுண்டா? பாவம்.

பொது நன்மைகளில் உழைக்கிறவர்களுக்கு உதவி செய் அன்புகாட்டு. தங்கள் சொந்த வருமானத்தையும் சௌகர்யத்தையும் விட்டு பொது நன்மைக்கு உழைக்கிறார்களே! அவர்களுக்கு உங்களைத்தவிர வேறுயார் துணைஇருக்கிறார்கள்? அல்லது பொது நன்மைகளில் உழைக்க யார் முன் வருகிறார்கள்?

சத்துருக்களுக்கும் உதவி செய். அவர்கள் மனதை அன்பினால் கட்டு. தெரியாமையினாலும் நாகரீக சுழற்சியின் வேகத்தினாலும் உனக்கு தீங்கு நினைக்கிறார்கள். அவர்கள் தவறை மன்னி. தாங்கள் செய்த தவறுதலை நினைத்து மனம் புண்ணாகிறவரை பொறுத்திரு, ஏனெனில் நல்லகாரியம் செய்ய பழகும் சக்தி அவர்களுக்கு இல்லை. அவர்கள் கற்கவுமில்லை.

உபகாரிகளுக்கு உபகாரம் செய். அவர்களிடம் அன்பு பாராட்டு. கஷ்டம்வந்தபோது திருப்பி நமது கடனை செய்ய தவறிவிட்டால் தர்மதேவதை சிரிப்பாளன்றோ? அவர்கள் மனது கலங்கினால் உயிர்கள் ஒருக்காலும் வாழ்வதில்லை. தெங்கும் தாளுண்ட நீரை தலையாலே தருகின்றதல்லவா?

கிராம நிர்மாணம்.

முந்திய பத்திரிகையில் கிராம பாதைகளை சீர்படுத்த கிராமபாதை ஆள் ஒவ்வொரு வட்டத்துக்கும் ஒருவரை ஏற்படுத்த வேண்டுமென கூறினேம். அம்மாதிரி ஆட்கள் ஒவ்வொரு வட்டத்துக்கும் ஏரி, வாய்க்கால், ரிப்பேருக்காகவும், வன உற்பத்திக்காகவும், குளம் காவலுக்காகவும், நால்வரை நியமிக்கவேண்டும்.

வேலைகள்:— மராமத்து ஆள் ஏரிகரைகளை தினந்தோரும் உடைப்புகளை சீர்படுத்தவும், மண்வாரி கொட்டி கரைகளை அகலப்படுத்தல். அலைமோதும் இடங்களில் உள் பக்கம் புல்மோரை பத்தைகளை வைத்து வளர்ப்பது; ஏரி உள்புரம் வயல் புல்லுகளை வளரச்செய்வது கோரைகளை விர்த்திசெய்வது வாய்க்கால்களை சுத்திசெய்வது முதலாகிய வேலைகளை செய்து வரவேண்டும். வன உற்பத்தி, ஆள்பாதை ஓரங்களிலும், ஏரிகரைகளிலும் புறம்போக்குகளிலும், தழை மரங்களையும், கலப்பை முதலிய உழுக்கருவி மரங்களையும், புளி, மா முதலிய மரங்களையும் நட்டு பயிராக்க ஏற்பாடுசெய்யவேண்டும், குளம் காவல் ஆள் குளத்தை சுத்தமாய் வைத்திருப்பதோடு குளம் புறம்போக்கில் மரங்களையும் பூஞ்சோலைகளையும் வைத்து காப்பாற்றுவதுமாம்.

சம்பளம்:— மராமத்து ஆளுக்கு ஏரியில் மீன், வேப்புல் விற்பனை முதலியவைகளிலிருந்தும், குளத்தாருக்கு குளம் புறம்போக்கில் மரம், சோலைகளிலிருந்து வரும் வருவாயுத்வனவுற்பத்தி ஆளுக்கு மரங்கள் உற்பத்தி செய்வதிலிருந்தும் பணத்தை உற்பத்தி செய்யவேண்டும் சில ஏரிகளில் மீன் விற்பனை, வேப்புல் விற்பனைகளிலிருந்து நானூறு ஐந்நூறு ரூபாய்கள் வருமானம் வருகிறது. இதை கிராமத்தில், கோவில் திருவிழாக்களில் செலவு செய்வதாக சொல்லி முதலாளிகள் ஆவாகனம் செய்து விடுகிறார்கள்.

சர்க்கார் இவர்களுக்கு மாதம் 4 ரூபாய் மேனிக்கு முதலில் சம்பளம் கொடுக்கலாம். கிராமத்தார்கள் வீண் சோம்பேறி பிச்சைக்காரர்களுக்கு செலவழிக்கும் ஆகாரத்தை இவர்களுக்கு கொடுத்து காப்பாற்றலாம். கிராமத்தார்கள் மூல்யமாய் மாதம் 4 ரூபாய்க்கு உணவு பண்டங்கள் கொடுத்து வரவேண்டும். இதனால் கிரா

மத்தாருக்கு மகத்தான நன்மைபயக்கும். அமோனியா உரங்களுக்காக சிலவழிக்கும் பணத்தை மிச்சப்படுத்தலாம். கலப்பை முதலிய மரங்களையும் விறகு களி வகையராக்களையும் இலேசில் அவரவர்கள் கிராமங்களிலிருந்தே உற்பத்தி செய்துவிடலாம். குடியானவர்களுக்கு வேண்டிய சகல வசதிகளுக்கும் முதலாவது ஏரிகளை நாற்புரமும் ஆழமாக வெட்டி ஜலத்தை தங்கும்படி செய்வதே நாட்டுக்கு முதல் அங்கம். சோலைகள் பூங்காவனம், சாலை மரங்கள் வைத்து காப்பதே இரண்டாவது அங்கம். மூன்றாவது குளம் கோவில் பள்ளிக்கூடம் அமைந்திருத்தல் ஆகும்.

வணிகத்தொழில்.

1. பெருங்காயம் செய்யும் விதம்.

பால் பெருங்காயம்	1 பலம்
ஊசிமிளகாய் அல்லது காரமுள்ள மிளகாய்	3 பலம்.
கோதுமை மாவு	3 பலம்.
முருங்கைப்பட்டை	3 பலம்.

இவைகளை ஒன்றாய் அரைத்து உண்டை செய்து தோலினாலாவது முறட்டு துணியினாலாவது மூடி 15 தினம் பொருத்து சிறுசிறு துண்டுகளாக வெட்டி விற்பனைக்கு உபயோகிக்கலாம்.

2. ஸ்நானப்பொடி

சீயக்காய் தூள் பலம்	3
இலுப்பைகட்டி தூள் பலம்	3
அரப்பு பச்சிலை தூள் பலம்	3
சந்தண தூள் பலம்	3
கஸ்தூரி மஞ்சள் தூள்பலம்	3
பச்சைப்பயிறு தூள் பலம்	3

இவைகளை ஒன்றுசேர்த்து சிறு பொட்டலங்களாக பாக்செய்து விற்பனைக்கு தயார் செய்யலாம். சொரிசிறங்கு முதலிய வியாதிகள் அணுகாது. தேகம் சிவந்து காணும். நாற்றம் முதலிய பலவித துர்க்கந்தம் நீங்கும். சோப்புகளைவிட இதை உபயோகிப்பதால் நன்மை உடனே தெரியவரும்.

3. மெழுக்குவர்த்தி.

மீன் கொழுப்பு அல்லது மிருகத்தின் கொழுப்பு 10 பலம் எடுத்து அதோடு வெள்ளை மெழுகு 2 பலம் வெள்ளை குங்கிலியம் 1 பலம் சேர்த்து உருக்கி தகரகுழாய் அல்லது மண்ணினால் குழாய் செய்து நடுமத்தியில் திரிவைத்து ஊற்றி ஆரியபிறகு நல்லமெழுகு வர்த்திகளாகும். மணிலா எண்ணெயிலும் கலந்துசெய்யலாம்

4. கற்பூரம்.

கற்பூரபால் 1 பலம் பட்டுப்போன மரங்களிலுள்ள மரக் காளானை சேகரம் செய்து 5 பலம் சேர்த்து காய்ச்சி பில்லையாக அச்சுகளில் ஊற்றி விற்பனைக்கு தயார் செய்யலாம்.

5. துணிசோப் செய்யும் விதம்.

விளக்கெண்ணெய் 1 பலம்	காஸ்டிங் சோடா 1 பலம்
கிளிஞ்சள் சுண்ணாம்பு 4 பலம்	கொழுப்பு 3 பலம்

இவைகளை சேர்த்து காய்ச்சி அச்சுகளில் வார்த்து பாக்செய்து உபயோகப்படுத்தலாம்.

சங்கு தொனி.

(25 வது பக்கத்தொடர்ச்சி)

21. ஒரு தொழில் தெரிந்தவனுக்கு எல்லா தொழில்களை யும் செய்ய எளிதாயிருக்கும். ஒரு தொழிலும் செய்ய தெரியாத வனுக்கு தொழில்களைப் பார்த்தால் பிரமிப்பு உண்டாவதோடு தொழில்களினுடைய அருமை தெரியாதவனாகிறான்.

22. ஒரு வீட்டிலிருப்பவர்களெல்லாம் அந்த வீட்டின் எஜமானனின் சம்ரக்ஷணையிலுள்ளவர்கள் அவர்களிடத்தில் ஏதே னும் குற்றம் காணப்படின் அவர்களின் எஜமானனிடம் சொல்லி தண்டிக்கவேண்டுமேயொழிய நீயாக தண்டிக்கக்கூடாது.

23. தான் சாப்பிடக்கூடிய உணவுக்குமேல் அதிகம் இருப்புகட்டிவைப்பவனும், தான் உடுத்திக் கொள்வதற்குமேல் அதிகமாய் உடைகளை பெட்டியில் வைத்து பூட்டுகிறவனும், தான் ஓர் நாளில் செய்துமுடிப்பதற்கு மேல் அதிகமான வேலைகளை வாங்கி பாக்கியில் வைத்திருக்கிறவனும், உணவு இல்லாதவனுக்கும், உடை இல்லாதவனுக்கும், வேலையில்லாதவனுக்கும், காரண பூதங்களாயிருக்கின்றார்கள்.

24. பிள்ளைகளுக்கென்று தகப்பன் அதிகமாய் சேர்த்து வைக்கும் ஆஸ்தி, அவர்களை சோம்பேறிகளாகவும், உலக அனுபோகமில்லாதவர்களாகவும், தொழிலருமை தெரியாதவர்களாகவும் செய்வதோடு சகல அயோக்கியத்தனத்துக்கும் அவர்களை தூண்டும் எமனுமிருக்கின்றது.

25. பெண்களும் ஆண்களும் எல்லோரும் சமரஸம் என்று எண்ணிக்கொண்டாலும் சில விஷயங்களில் புருடர்களுக்கு பெண்கள் அடங்கி தொண்டுசெய்யவும் சில விஷயங்களில் பெண்களுக்கு புருடர் தொண்டு செய்யவும் கடமைப் பட்டுள்ளார்கள்.

26. வேலை செய்துகொண்டிருப்பவர்களிடத்தில் போய் வாயாடிகளும் பரிகாசக்காரர்களும் தொந்திரவு செய்யக் கூடாது. வீண் வாதங்களும் குதர்க்கமும் வேண்டாம். அதனால் தொழிலாளிக்கு பலகஷ்டம் விளையும்.

27. பொறாமையுள்ளவன், தீராசந்தேகமுள்ளவன், பிறர் பொருளால் ஜீவிப்பவன், அதிக ஆசையுள்ளவன், முன்கோபமுள்ளவன் இவர்கள் சதா கஷ்டத்தையே அனுபவிப்பார்கள்.

28. மிருகங்களில் அறிவுள்ளது நாய் ஆனால் மனிதர்களில் பொறாமையுள்ளவனை நாயினத்தில் சேர்ப்பது வழக்கம்.

29 கல்வியில் பெரியவன், செல்வத்தில் பெரியவன், உத்தியோகத்தில் பெரியவன் என்று டாம்பீகம் செய்வதினால் என்ன பயன்? ஏழைகளுக்கு கொடுத்துதவுகிறவனே பெரியவனென மதிக்கப்படுகிறான்

30. உயிரைக்கொன்று தின்னாதவனுக்கே மூர்க்க குணம் ஒழியும்; அன்பு வளரும்.

31. காங்கிரஸ் தேசீய நன்மைகளுக்கும் பொதுஜனங்களுக்கும் பாடுபடும் ஓர் ஸ்தாபனமாகும். அதோடு எல்லோரும் கக்ஷிபேதமின்றி ஒத்துழைத்தால் நன்மை பெறலாம்.

32 ஜஸ்டிஸ்கக்ஷி பிராம்மணரல்லாதாருடைய க்ஷேமத்தையும், அபிவிர்த்தியையும் கோரி உழைத்துள்ளது. அந்தகாரம் என்னும் குகையிலிருந்து மக்களை வெளியேற்றியிருக்கிறது. சுயநலம், அடிமை என்னும் கட்டுகளிலிருந்து மக்களை விடுவித்திருக்கிறது. ஆகையால் உலகம் உள்ள வரையில் அதன் நன்றியை மறக்கப்படாது.

33. தேச பொதுஸ்தாபனமாகிய காங்கிரஸ் லக்ஷியத்தை ஒவ்வொரு இந்தியனும் அலக்ஷியம் செய்யப்படாது ஆனால் பிராமணரல்லாதார்கள் காங்கிரஸில் புகுந்து பொதுஜன தொண்டு செய்வது போற்றத்தக்கது. இது காங்கிரஸ் முடிந்த பிறகு சப் கமிட்டி மூலம் பிராம்மணரல்லாதார்க்கோ அல்லது வேறு எந்த கக்ஷிக்கோ உள்ள கஷ்டங்களையும் உரிமைகளையும் நிவர்த்திக்க தற்காப்புகள் ஒதுக்கப்படவேண்டும்.

34. கக்ஷி பிரதிகக்ஷிகளிருப்பதால் உத்தியோகஸ்தர்களுக்கும் பணக்காரர்களுக்கும் கஷ்டம் விளைவதில்லை. ஏழைகளுக்கோ மகத்தான கஷ்டம் உண்டாகிற விஷயத்தை கூர்ந்து கவனித்து ஒன்றுபடல் வேண்டும்.

35. இதனால் கொள்கை பேதமுள்ளவர்களெல்லாம் தங்கள் கொள்கைகளை விட்டுவிடவேண்டுமென்பது கருத்தல்ல. ஒரே தேசீயகக்ஷியில் சேர்ந்துகொண்டு தங்கள் தங்களுக்குரிய நோக்கங்களின்படி உரிமைகளை பெற்றுக்கொள்ள முயலவேண்டுமென்பதே.

36. இந்து கோவில்களில் திருவிளக்கேற்றுவதும், கோவிலை வலமாய் வந்து கும்பிடுவதும் தவிர மற்ற சிலவுகளெல்லாம் நம் நாடு விடுதலையடையும்வரையில் ஒதுக்கிவிடவேண்டியது கடமையாகும். இது படிக்காசுபுலவர் திருவாக்கு.

துப்பறியும் பகுதி.

மகதநாட்டில் கோலன்ஸ், சாங்கியென சஸ்திரநிபுணர் களிருந்தார்கள். அவர்கள் புத்திசாலித்தனமும் புதிய விஷயங்களை கண்டுபிடிப்பதில் ஆர்வம் கொண்டவர்களாயிருந் தார்கள். அவர்கள் ஆராய்ச்சி செய்வதற்காக பல தேசங்களு க்கு போய் பல விஷயங்களைக்கண்டு ஆராய்ச்சி செய்து வந்தார் கள். ஓர் நாள் குந்தலபுரிக்கு சமீபத்திலுள்ள மலைப்பிரதேசத்தி லுள்ள ஓர் காட்டுக்குச் சென்றான். அங்கே ஓர் ராக்ஷதன் கோர ரூபமாக பெருமூச்சுவிட்டு நித்திரை செய்துக்கொண்டிருந்தான். பலர் அவனருகில் செல்வதற்கு பயந்து கொண்டிருந்தார்கள். கோலன்ஸ் பயமின்றி அவனருகில்போய் அவனை தட்டினார். அவன் விழித்து பார்த்து எழுந்து புன்னகையோடு அவரோடு உறவாடி னன். அவன் மிகுந்த சாந்தமாகவும் சொல்லுகிறபடி செய்யக் கூடியவனாகவு மிருந்தான். கோலன்ஸ் சொல்லுகிறபடி எல்லா வேலைகளும் செய்தான். இரவும் பகலும் ஒய்வு இன்றி சதா வேலை செய்வதில் சலிப்பதே கிடையாது. அவனுக்கு ஏதேனும் ஆகார மும் தாகமும் கிடையாது. மனிதர் செய்யக்கூடாத அருமை யான பலவேலைகளைச்செய்வான். இயந்திரத்தில் மாவு அரைப் பது, புல் அறுப்பது மரங்களை அறுப்பது மனிதரை தூக்கிச்செல் வது முதலியவற்றை சிரமமின்றி செய்து வந்தான். கோலன்ஸ் அவனால் அதிக பிரயோஜனத்தையடைந்தான்.

மற்றொருநாள் கோலன்ஸ் வீட்டிலிருக்கையில் அந்த ராக்ஷ தனைக்கூப்பிட்டு இந்த காட்டில் நீ ஒருவன்தானா வேறு யாராவது உன் கூட்டாளிகளிருக்கிறார்களா? என்றார். ஆம் மலையில் என து சகோதரன் ஒருவன் உள்ளான் என்று சொன்னான். கோ லன்ஸ் பலநாள் தேடி ஒருநாள் மலையின் உச்சியின் உட்கார்ந்து இருப்பதைக்கண்டு அவனை அழைத்துவந்தான். அவன் முன் னிருந்தவனைக்காட்டிலும் பராக்கிரமமான வேலைகளை செய்து வந் தான். ஆயிரக்கணக்கான ஜனங்களை முதுகில் தூக்கிச் செல்வான். பலவித வேலைகளை எளிதில் செய்வான். ஆனால் அவன் கொஞ்சம் நீராவியை மட்டும் குடித்துவந்தான் சில சம யத்தில் சோர்ந்தும் படுப்பான். ஆனால் முதல் ராக்ஷதனைப்போல் அவ்வளவு சாந்தமுள்ளவனன்று. இவனிடம் பயத்தொடு காலங்

கழிக்கவேண்டும். தவறிவிட்டால் காயப்படுத்துவதோடு உயிரையும் மாய்த்துவிடுவான். இவனால் கோலன்ஸ் அநேக நன்மைகளை பெற்று பெரிய வீடுகளையும் பலவிதமான ஆடம்பர சாமான்களையும் செய்துக்கொண்டான்.

மூன்றாவதாக ஓர்நாள் இவர்கள் உதவியால் மற்றொரு ராக்ஷதனையும் கண்டுபிடித்தார். அவன் இவர்களிருவர்களைக் காட்டிலும் மகத்தான காரியங்களை செய்ய வல்லவனாயிருந்தான். அவனுக்கு திரேகம் உஷ்ணமாயிருக்க சதா திரேகத்தை தேய்ப்பதே தகுந்த ஆகாரம். அவன் இரவும் பகலும் ஓயாமல் வேலை செய்வான்; பேசுவான்; பாடுவான்; ஆடுவான். துரிதமாக சொன்ன இடத்திற்கு போய்வருவான். ஜனங்களை சுமந்துப்போவான். அவன் வாயைத்திரந்தால் நக்ஷத்திரங்கள்போல் பல்லுகள் பிரகாசிக்கும். அவனைக்கொண்டும் கோலன்ஸூம் சாங்கியும் அவர்கள் தொழில்களுக்கும் ஏராளமான சௌகர்யத்தையும் லாபத்தையும் செல்வத்தையும் பூமிசுதந்தரத்தையும் சாம்பாதித்து மனமேட்டிமையோடு வாழ்ந்து வந்தார்கள்.

இந்த விடுகதையிலுள்ள மூன்று பூதங்கள் யாவை? சொஞ்சம் விபரத்தோடு சுருக்கமாக எழுதுகிறவர்களுக்கு நமது பத்திரிகைக்கு ஆயுள் சந்தாதாரர்களாக பதிந்துக்கொள்ளப்படும்.

தத்துவ விளக்கம்.

பெருமாள்மாடும், மாட்டுப்பண்ணையும்.

ஓர் காலத்தில் ஜனங்கள் காளைமாடு காயடித்து உழவு எருதுகளாக உபயோகப்படுத்தி வந்தார்கள். அக்காலத்தில் மாடுகள் உயரமாகவும் புஷ்டியாயும் பலிஷ்டமுள்ள பொலி காளை அவசியமாயிருந்தது ஜனங்களெல்லாம் அவரவர்க்கு உபயோகமாக தங்கள் மாட்டுக்காளைகளை பெரிதாவதற்குமுன் விரையடித்து பயிர்தொழிலுக்கு உபயோகப்படுத்திக்கொள்வதே தவிர பொது நன்மைக்கு ஒருவராவது பொலி காளைகளுக்கு விடுவது கிடையாது. இதனால் சிறு காளைகளுக்கு பிறக்கும் மிருக உற்பத்தி

உயரத்திலும்பலத்திலும் அற்பமாகி வருகிறபடியால் அக்காலத்து சில அறிஞர்கள் சில யுக்தி செய்திருக்கிறார்கள்.

பொலி காளைக்கு எவனை விடு என்றாலும் மறுப்பது வழக்கமாயிருந்ததால் மாடுகளுக்கு நோய் ஏதேனும் காணும்போழ்து அதன் பரிகாரத்துக்காக ஜனங்கள் அறிவாளிகளிடத்தில் யோஜிப்பது வழக்கம். அந்த சமயம் பார்த்திருந்த அறிஞர்கள் அந்த வியாதி தீருவதற்கு பெருமாளுக்காக (சூலம் போட்டு) அடையாளமிட்டு ஓர் காளையை விட்டுவிடவேண்டும். அதை கட்டிவைக்கவும், அடிக்கவும், வேறு துன்பப்படுதலாகாது என்? அது சாமிகளை அப்படியானால் உன் மாடுகளுக்கு ஒருபோதும் இந்த வியாதி அணுகாது என்று சொல்லிவிடுவார்கள். இப்படியே மாட்டு வியாதிகாணும் ஒவ்வொருவனுக்கும் சந்தர்ப்பம் நோக்கி சூலம் போட்டு பெருமாள்மாடு விடும்படி சொல்லிவந்ததால் அக்காலத்தில் கேட்பாரில்லாமல் மேய்ந்து கொழுத்த பொலி காளைக்கு மாடு உற்பத்தியாகி பெருகிவந்தன. நாளடைவில் அதன் காரணம் தெரியாமல் சூலம்போட்டு ஆட்டக்காரர்கள் வசம் ஒப்படைத்து விட்டார்கள்.

சுகாதாரம்.

வாழ்வின் பிரதானகாரியமெல்லாம் சுகாதாரத்தையே பொறுத்திருப்பதாக முன்கூறியுள்ளோம். சதாசுத்தமாயிருக்க நினைப்பதே அதிர்ஷ்டத்தின் ஆரம்பம். சுத்தத்தின் முடிவே அதிர்ஷ்டத்தின் வெற்றியென்னலாம். சுத்தமாயிருப்பதற்கு அநேக விஷயங்களை நாம் கவனிக்கவேண்டியிருக்கின்றன. பெரும்பாலும் ஆசார சடங்குகளெல்லாம் சுகாதாரம் மக்களிடை நிலவுதற்கு செய்துள்ள கற்பனை விஷயங்களாகும்.

சுத்தத்தை இரண்டு பிரிவாக பிரிக்கலாம். ஒன்று மனோ வாக்கு காயங்களினால் நேர்மையான முறையில் நடப்பது. இதற்கு நல்லொழுக்கம் என்று பெயர். தேக சுத்தமுள்ளவனாயிருந்தும்

மனோசுத்தும் இல்லாது பிறர்க்கு தீங்கு நினைப்பதும், புறங்கூறுவதும் ஓரஞ்சொல்லல், பிறற்கு தீங்கு விளைவித்தல் முதலிய தீய காரியங்களை செய்தாலும் அதனால் ஒருவர்க்கொருவர் கலகமும் சண்டையும் ஏற்பட்டு சதா கவலையும் மனக்குழப்பமும் நேரிட்டு சந்தோஷம் சாந்தியென்னும் மனோநிலமை குலைந்து பயித்தியக் காரனைப்போலாகிறான்.

"தாகமறிந்தின்பநிட்டை தாராயேல் ஆகெடுவேன்
தேகம் விழுந்திடில் என்செய்வேன் பராபரமே"

என்று தாயுமானவர் பகருவதையுணர்ந்தால் மனம் வாக்கு காயங்கள் ஓர் நிலைப்பட்டு இன்பம் எய்தியபோதிலும் தேகம் இறந்தபடின் என்செய்வது என்பது உணரத்தக்க காரியமாகும்: எனவே உயிரை காப்பாற்ற முயலும் ஒவ்வொருவனும் உடலையும் காப்பாற்றவேண்டியது முதற்காரியமாகும்.

உடலை நீண்ட ஆயுளோடும் அதன் ஒவ்வொரு உருபுகளையும் பலத்தோடும் கூர்மையாகவும் வைத்திருக்க வேண்டுமானால் சுகாதார விதிகளை நன்கு கவனித்து படித்து உணர்ந்து அதன்படி நடக்கவேண்டும்.

"தூயவுடையூணுந்துணையாயின் நல்வாழ்க்கை
நோயோன் மருந்தேன் நூவல்"

என்னும் மூதுரைப்படி நமது உடலை சுகிகரமாகவும் நமது வாசஸ்தலங்களை சுத்தமாகவும் வைத்திருத்தல் மிகச்சிறந்தவற்றுள் முதலானதாகும். தன் திரேகத்தை ஜாக்கிறதையாகவு ம், சுகாதாரவிதிப்படி ஒழுங்காகவும் நடந்து கொள்ள இளமைதொட்டு பழக்கத்துக்கு கொண்டுவருவதைவிட வேறுகாரியம் யாதுள?

நிற்க. "சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே" என்று தாயுமானவர் கூறியபடி நமது உடல் நடமாடும் கோயில் நமது ஜீவன் குடிகொண்டு உய்ய கடவுள் நமக்கு இந்த உடலை கொடுத்திருக்கிறார். நமது உடலை சுறுசுறுப்பாகவும் சுத்தமாகவும், பலமாகவும், வினைசெய்து பழக்கமாகவும், சுதந்தரமாகவும் வைத்துக்கொண்டு அரிய உயிர்களுக்கு தொண்டு செய்யவேண்

டியது. மனித பிறவியின் நோக்கம் ஆகும், (நமது ஆன்மா கடவுளோடு ஐக்கியமாவதற்கு ஆத்ம சுததம் அவசியம். ஆத்ம சுகத்திற்கு தேகசுத்தம் அவசியம்.)

"யான் புரியவேண்டுங்கொல் இவ்வுலகில் செத்தாரை
ஊன்புரிந்து மீள உயிர் பித்தல்"

என்று திருவருட்செல்வர் இராமலிங்க சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளினர். உலகத்துக்கு தொண்டுசெய்ய ஓர் திட்டத்தை தயாரித்த ஆன்மா இறந்துவிடுமாகில் பலவுயிர்களுக்கும் கஷ்டத்தையும் நஷ்டத்தையும் உண்டாக்குவதை நினைத்து அவ்வுயிரை ஊன்புரிந்து மீள உயிர்ப்பிக்க கோருகிறரேயொழிய தனக்கெனவாழும் சுயபற்றுள்ள பூமிக்கு பாரமான உயிர்களைக் குறித்தல்ல.

"பொய் விளக்கப்புகுகின்றீர் போது கழிக்கின்றீர்
புலைகொலைகள் புகுகின்றீர் கலகலவென்கின்றீர்
கைவிளக்கு பிடித்தொரு பாழ்ங்கிணற்றில் விழுகின்ற
களியரென களிக்கின்றீர் கருத்திருந்தும் கருதீர்
ஐவிளக்கு மூப்பு மரணதிகளை நினைத்தால்
அடிவயிற்றை முறுக்காதோ கொடிய முயற்றுலகீர்
மெய்விளக்குமெனது தந்தை வருமின்ற தருணம்
மேவிய தீண்டடைவீரேல் ஆயுள்பெறுவீரே"

என்று நித்திய வாழ்வுக்கு அறை கூவியழைக்கும் இராமலிங்க சுவாமிகளின் உரைகளுக்கு செவியுள்ளோரன்றே உடலில் முதன்மையையறிவர்.

தேக சுகாதாரத்தை பலப்படுத்த பலவித விலக்குகளை கவனிக்கவேண்டும். "மிகினும் குறைபினும் நோய்சொலு நூலோர்" என்றபடி அளவுக்கு அதிகப்படினும் அளவுக்கு குறைவுபடினும் நோயையே உண்டாக்கும். ஏராளமான உணவுகளையும், பானங்களையும், உபயோகப்படுத்துவதினலும், உடைவாஸஸ்தலங்களை அதிகப்படுத்துவதிலும் சுகயீனமேயுண்டாகும்.

செய்தக்கவல்ல செயக்கெடும்
செய்தக்க செய்யாமையாலும் கெடும்—குறள்

என்றும் நமது தெய்வப்புலவர் உரைத்தபடி சுகத்தை பலப்படுத்தவேண்டியதற்கு உற்ற சாதனங்களாயுள்ள காரியங்களை மக்கள் செய்வதால் மனித வாழ்க்கையை பாழ்படுத்தி மிருக வாழ்கையிலீடுபடுத்துகின்றது.

தற்போழ்து நமது நாட்டில் வீரங்குன்றிவிட்டது ஆண்தன்மை குறிகிவிட்டது. ஆண்களும், பெண்களும் நன்நெறிக் கடைப்பிடித்து வொழுகினாலன்றி நமது சமுதாயம் திறனுற்று விளங்காது. நவீன நாகரீகத்தின் கேட்டினால் நமது மக்கள் கெட்டிப்பொம்மைபோல் சொத்தையாகிறார்கள். சதாசாரங்களை விடுத்தனர். துராச்சாரங்களை கைப்பற்றினர். கண்ட உணவுகளை அளவுக்குமேல் உண்டு தங்கள் வயிறுகளை அசுத்தப்படுத்திக் கொள்கின்றனர். உணவின் அளவு தவரியதால் உடலிற்பல பிணிகள் புகுந்து அதை துளைத்து வருகின்றன. நமது முன்னோர்கள் கேட்டிராத புதப்புது பிணிகளும் அவற்றைத்தீர்ப்பதற்கு புதப்புது மருந்துகளும் உடலிற்புகுகின்றன. சுடு நொய்க்கஞ்சி சாப்பிடுவதற்கு பதில் பித்தத்தைத்தூண்டும் காப்பிக்கடைகள் எங்கும் நிறைந்திருக்கின்றன. நோய் ஆரம்பிக்கும்போது குடும்பத்தில் உபசாந்தி செய்யும் முறைகளை அனுஷ்டிப்பதைவிட்டு எங்கும் மருந்து கடைகள். திரேகத்தை காற்று படும்படி திறந்து வைக்காமல் அடுக்கடுக்காய் சட்டைகளால் மூடித்திரியும் நடைபொம்மைகள் எத்தனை ஆகாரத்தை பிறருக்கு கொடுத்து தானும் உண்ணமல் ஆத்திரத்தோடு வயிறு வீங்க உண்டு பொத்தை பொத்தையாக சரீரம் வளர்த்து தொந்தியை சுமந்து அசைய முடியாமலும் மூச்சி திணரிவிடும் வாழ்வை மண்ணுக்கும் மண்ணைகளெத்தனை? உண்பதும் உறங்குவதும் குட்டிப்போடுவதுமாகவே தன் ஜென்மத்தை கழிகது தர்ம சிந்தையை கனவிலும் எண்ணாத விலங்குகள் எத்தனை. வயிற்றை நிறப்புவதே வாழ்வின் பயன். விருந்துண்பதே அருந்தவப்பயன் என்று திரியும் வீணர் எத்தனை! குடலை நிறைத்து மேலும்மேலும் தூருத்திபோல் கும்பியை பெருக்கவைப்பதே கொள்கையாயுள்ளவர்கள் எத்தனை? [தொடரும்]

சமாச்சாரத்திரட்டு.

மாட்சிமை தங்கிய நமது ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் தேகவியோகமானதை முன்னிட்டு உலகெங்கும் துக்கம் கொண்டாடப்பட்டன.

* * *

நமது ஐந்தாம் ஜார்ஜ் சக்கிரவர்த்தியின் முத்த குமாரர் எட்டாவது எட்வார்ட் மன்னர் பிரானுக்கு மகுடாபிஷேகம் 1937-ஞு மே-மீ 12-உ நடக்குமென தெரிகிறது. அதற்காக 20 கோடி ரூபாய்கள் செலவிட்டு நகரை அலங்கரித்து வருகிறார்கள். அந்த காக்ஷியை லண்டன் நகரத்தார் இதற்குமுன் பார்த்திருக்கமாட்டார்களென தெரிகிறது.

* * *

டில்லியில் புதிய வைஸ்ராயராக லார்ட் லின்லித்கோபிரபு வந்திருக்கிறார். இவர் குடியானவர்களுக்கு மிக்க உபகாரம் செய்யப்போவதாக கூறுகிறார். பொதுவாக அனைவருக்கும் பேருதவி செய்யப்படுமென உத்தியோக முறையில் அறிவிக்கிறார்.

* * *

தென்னார்க்காடு ஜில்லா ஜீவரக்ஷா பிரசாரக சபை ஒன்று திண்டிவனத்தில் ஆரம்பிக்கப்பட்டு பிரதி அமாவாசையிலும் ஏழைகளுக்கு கஞ்சி வார்க்கப்படுவதோடு அஹிம்ஸா பிரசாரம் செய்யப்படுகிறது. C சா. சாமிக்கண்ணு காரியதரிசி அவர்களின் பெருமுயர்ச்சியால் சமீபத்தில் விழுப்புரத்திலும் ஓர் சபை நிருவப்படுமென ஓர் நிருபர் தெரிவிக்கிறார்.

* * *

கூடலூர் O. T யில் இந்திய வாலிபச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டு பிரதி அமாவாசையின் பொதுஜன முன்னேற்றத்திற்காக சபை கூட்டி பேசப்படுகிறது.

* * *

நமது புதிய வைஸ்ராய் லார்ட் லின்லித்கொ பிரபு எல்லா ஜில்லா கலெக்டர்களும் கிராமாந்தரங்களுக்கு போய் கூடாரத்தில் தங்கு குடிகளுடைய குறைகளை நேரில் விசாரிக்க காலத்தை ஒதுக்கிக் கொள்ளவேண்டுமென சிபார்சு செய்திருக்கிறார்கள்.

* * *

நமது தாலுக்கா ஏஜெண்டுகள் பலரிருக்கிறார்கள். ஆனால் விழுப்புரம் நமது ஏஜெண்டும் உபகாரியுமாகிய ரயில்வே பென்ஷன் ஆபீஸர் ருத்திரப்ப முதலியாரும் அவர் சகலபாடிகளும் அரியதொண்டு செய்திருப்பது மறக்கமுடியாத விஷயம்.

வட்டிவிகிதம்:- போஸ்ட் டாபீஸ் ஸேவிங்கு பாங்கியில் போடும் பணத்திற்கு தற்காலம் $2\frac{1}{4}$ சதம் வட்டி கொடுத்து வந்தது அடுத்த ஜூலை மாதத்திலிருந்து 2 சதமாகக் குறைக்கப் போகிறார்களாம்.

கதர் உடை கவர்னர்.

மத்தியமாகாண அரசாங்க உள் நாட்டு இலாகா காரியதரிசியான திரு இராகவேந்திர ராவ் அவர்கள் இம் மே-மீ 16-வ ஆக்டிங் கவர்னர் பதவியை ஏற்றுக்கொண்டார் இவர் வழக்க உடையான கதரையே தரித்திருக்கிறார்

* * *

சென்னை மாகாணத்திற்கு ஆக்டிங் கவர்னராக சர். கே. வி. ரெட்டி நாயடு அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார் இவர் நான்கு மாதகாலம் இந்த பதவியிலிருப்பாரென தெரிகிறது.

* * *

விழுப்புரம் கன்டிராக்டர் N கோவிந்தராஜுலு நாயுடு அவர்கள் ஓர் பெரியார். மனித சமூகத்திற்கு ஓர் இல்லற தர்மி எத்துறையில் தொண்டு செய்ய முடியுமோ அதை உத்தம உலகத்திற்கு போதிக்க ஒழுகிக் காட்டும் ஓர் உத்தமராவார் அவர் உறைவிடம் நூற்றுக்கணக்கான ஏழை மக்களுக்கு உணவு, உடை அளிக்கிறது. தர்மம் செய்ய தெரியாதவர்கள் தாங்கள் சேமித்து வைத்திருக்கும் பொருள்களை இத்தகைய ஒழுங்கு தெரிந்தவர்களிடம் கொடுத்து தர்மத்தை நடத்தலாகாதா?

* * *

அபிசீனியாயுத்தம் சென்ற ஆறுமாத காலமாக வெகு கோரமாக நடந்து முடிவில் இத்தாலி அபிசீனியாவை ஜெயித்துவிட்டது. இதனால் பொது ஜனங்கள் சர்வ தேசசங்கத்தினிடத்தில் அவநம்பிக்கை கொள்ளுவதோடு கிறிஸ்து மதத்தில் அருவருப்பும் கொள்ளுகிறார்கள்.

* * *

கலப்பு விவாகங்கள் பிரதி மாதமும நூற்றுக்கணக்காக நடைபெறுகின்றன. நூற்றுக்கணக்கான விவாகங்கள் சுயமரியாதை முறையிலும் நடைபெறுகின்றன.

* * 6

புதிய அரசியல் திட்டப்படி பழைய ஓட்டர் லிஸ்டிலிருப்பவர்களைவிட எழுத்தறிவாளர்க்கும், பெண்களுக்கும் ஓட்டுரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. சென்னை சட்டசபை எலக்ஷன் அடுத்த செப்டம்பரில் நடைபெறும்போலிருக்கின்றது.

மேனாட்டு வெள்ளையரின் பெருந்தகைமை.

கொஞ்சகாலத்துக்கு முன் திண்டிவனம் தாலூகாவிலுள்ள

ஓர் கிருமத்தில் டேட் துரை காம்ப் செய்திருந்தார். நாராயணசாமி நயினார் ஓர் கேஸ் விஷயமாய் கலெக்டரிடம் வாக்குமூலம் கொடுக்கவேண்டியிருந்தது டேட் துரை சிகரெட் பிடித்துக்கொண்டே நயினாரை விசாரிக்க ஆரம்பித்தார் நயினார் துணிகரமாகத் தாங்கள் புகைபிடிக்கும் வரையில் தங்களிடம் வாக்குமூலம் கொடுக்க முடியாதென்று மறுத்துவிட்டார். உடனே டேட் துரை வெட்கமுற்று அந்தபுரத்தில் போய் புகை குடித்துவிட்டு பிறகு வந்து நயினாருடைய ஆசாரத்தையும் சீலத்தையும் மெச்சினாராம் நயினாரின் சுத்த ஒழுககம் பலரால் புகழப்பட்டது.

* * *

கோகல் பண்டு ரோட்டுகளிலுள்ள ஆற்று பாலங்களுக்குமேல் மெடல் பரப்பி சிமிட்டியாவது தாராவது போடவேண்டும். இல்லாவிட்டால பாரமான மோட்டார் வண்டிகள் மேடு பள்ளங்களில் குதிக்கும் போது ஆர்ச் பாலங்கள் வெடிக்க ஆரம்பிக்கும் இரும்பு பாலங்கள் தளர ஆரம்பிக்கும்.

* * *

லோகல்பண்டு, P. W. D. டிபார்ட்மைண்டுகளிலுள்ள மேஸ்திரிகளின் நிலமை மிக்க பரிதாககரமாய் இருக்கின்றது. அவர்களை 4 மாதத்திற்கு 2 மாதத்திற்கு என்று உத்திரோகத்தில் அமர்த்தி திடீரென வீட்டுக்கு அனுப்பிவிடுவதால் அவர்கள் நிலமை பிச்சைக்காரர்களைவிட மிக இழிவாக இருக்கிறது. மேல் ஆபீசர் மேஸ்திரிகளை அனுப்பியிருக்கிறார்களென்று கொஞ்சம் சில ஓவர்சியர் மதிக்கிறதேயொழிய சர்க்கார் மேஸ்த்திரிகளுக்கு கொடுத்திருக்கும் உரிமைகளுக்கு பயந்தல்ல. சில ஓவர்சியர்கள் நாயைவிட கேவலமாய் நடத்துகிறார்கள். ஆபீசர்களும், கவர்ன்மெண்டாரும் கவனித்து உபாத்தியாயர்களுக்கிருக்கும் ஓரளவு சுதந்தரமாவது கோலவேண்டுவது புண்யமாகும்.

* * *

கூடலூர் ஜானகிராம் பிள்ளை நல்லபெருமா பிள்ளை அவர்கள் மஞ்சகுப்பத்தில் தர்மலிங்கம் செட்டியார், அழகப்ப முதலியார் முதலிய உத்தமர்கள் ஐந்து நிமிஷம்கூட தாமதமின்றி சந்தாதொகையை கொடுத்துதவி உள்ளார்கள். இவ்வாறு கையொப்பமிட்ட மற்ற சந்தாதார்கள் நடந்துகொண்டால் பத்திரிகை எவ்வளவு சீக்கிரம் அபிவிர்த்தி அடையும்.

ஒவ்வொரு கிராமத்தின் வருமானத்தில் சர்க்கார் முக்கால் பாகம் கிராமசீர்த்திருத்தத்திற்காகவே செலவழிக்க வேண்டும், எஞ்சித கால்வாசி பணத்தைக்கொண்டு தாலுக்கா, ஜில்லா முதலிய சர்க்கார் நிர்வாகச்செலவுக்கு உபயோக படுத்தவேண்டுவது சமதர்மமாகும்.

* * *

கிராமங்களில் அச்சுயந்திரம் வைப்பவர்கள் ஐந்து வருஷகாலமாகவாவது சென்னை முதலிய பெரிய அச்சுக்கூடங்களில் வேலைசெய்து தேர்ந்திருத்தல் அவசியம். எல்லாவேலைகளிலும் ஒருவருஷமாவது பழகப்படவேண்டும். வேலையில் அனுபோகமில்லாதவர்கள் அச்சாபீஸ் வைத்து நடத்துவது மிக்க நஷ்டத்தை விளைவிக்கக் கூடிய தொழிலாகும்.

* * *

குடியானவர்களும் தொழிலாளிகளும் தங்களுக்கு நேரிடும் கஷ்டங்களையும் தங்களுக்குள்ள குறைவுகளையும் உத்தியோகஸ்தரிடம் தெரிவிக்க தயங்கக் கூடாது. அசட்டுத்தனம் அல்லலுக்கு காரணமன்றோ?

* * *

சாமிக்காக பலியா?

தாயுமானவர் ஆண்டவனை ஸ்மரிப்பதற்கு ஓர் புட்பத்தையும் கிள்ளி அர்ச்சனை செய்வதற்கு மனமிசையவில்லை. ஏன்? ஆண்டவன் அந்த புட்பரூபமாய் மலர்ந்து வாசனைக்கொடுக்கும் போது வேறொரு பொருளில் ஆண்டவனிருப்பதாக அந்த மலரை சிதைக்கலாமா? என்பது அவரது கொள்கை. அப்படியிருக்க நம்மைப்போல் சுகதுக்கங்களை அனுபவிக்கும் அறிவுள்ள ஆடு, பசு, கோழி முதலிய ஜீவன்களை ஆண்டவன் பெயரைச்சொல்லி உடலிலிருந்து உயிரை பிரிக்கலாமா? அந்தோ பாவம்! பாவம்!! அவைகளுக்கு நம்மைப்போல் பேச சக்தியில்லாவிட்டாலும் அவைகள் கடவுளிடத்தில் முறையிடும். அவர் அதற்கு தக்க தண்டனை அளிப்பார். குளிக்கப்போய் சேற்றை பூசிக்கொள்வதுபோல கடவுளை பூஜிக்க போய் கடவுடைய கோபத்துக்கு ஆளாகலாமா? மகம்மதியர், கிறிஸ்தவர்கள்கூட சாமிக்காக ஆடுகளை பலியிடுவதில்லையே.

காரியதரிசி. சி. சாமிக்கண்ணு
ஜீவரக்ஷாபிரசாரசபை, திண்டிவனம்.

சமரஸம்.

சந்தாதார்களுக்கு ஓர் ஞாபகரம்.

1936-வருஷத்திற்காக வசூலிக்கும் ரூ 1—4—0. ஒரு வருட சந்தாவுக்கு ஆரம்பத்தை முன்னிட்டு 1937-வருஷ டிசம்பர்-மீ வரையில் இரண்டு வருஷத்திற்கு பத்திரிகை யனுப்பப்படும். பல உத்தமர்கள் ஆயுள் சந்தா கொடுத்துதவுதாய் கையொப்ப மிட்டிருப்பதால் பத்திரிகை இனி தாமதமின்றி நடக்குமென்பது நற்குறியாகும் கையொப்பமிட்ட சந்தாதாரர்கள் வி. பி. செலவின்றி தபாலில் மணியார்டர் செய்யகோருகிறோம்

பத்திரிகையின் ஏஜெண்டுகள் கொஞ்சம் முயற்சி யெடுத்துக் கொண்டால் பத்திரிகையின் முன்னேற்றத்திற்கு சாதகமாயிருக்கும்.

தற்கால சந்தாதார்கள் ஒவ்வொருவரும் பெரு முயற்சியினால், தங்களது நண்பர்களையும் சந்தாதார்களாக சேர்த்து ஆதரிக்கக் கோருகிறோம்.

ஆபீஸ் மானேஜரிடம் செலுத்தும் சந்தாதார்கள் 5 வருட சந்தா தொகையாக ரூபாய் 5ம் நேரில் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளவும்.

பத்திரிகாலயம் போஸ்டல் ரூல்படி விழுப்புரத்திற்கே மாற்றப் பட்டிருக்கிறது. சகல தபால்களும் கீழ்கண்ட விலாசத்திற்கு அனுப்ப கோருகிறேன்.

மானேஜர்,
சமரஸம் ஆபீஸ், விழுப்புரம்.

சமரச சந்தா விபரம்.

வருட சந்தா உள்நாட்டுக்கு	1—4—0.
,, வெளி நாடுகளுக்கு	2—0—0.
ஐந்து வருட சந்தா	5—0—0.
ஆயுள் சந்தா ரூபாய்	25—0—0.

ஆச்சர்யம்! ஆச்சர்யம்!!

ஜோதிடம்.

குறைந்தசார்ஜ்! நிறைந்தகுணம்!!

சாதகமில்லாதவர்களுக்கோர் அருந்தருணம்.

உங்களுடை சாதகமோ, பிறந்தநாளோ, தேதியோ, வருடமோ, மணிக்கணக்கோ ஒன்றும் வேண்டியதில்லை யென்று சொல்லி உங்களை ஏமாற்றி, உங்களுக்கு நாளை பெரியலாபம் கிடைக்கப்போகிறது. வேலை வரப்போகிறது, உங்களையடுத்தவர்களே உங்களுக்கு மாயம், மந்திரம், சூனியம் செய்கிறார்களென்று பலவாராகச் சொல்லி, உங்களுடைய பணங்களையோ, பொருட்களையோ, வாங்கிக்கொண்டுபோக இவ்விளம்பரங்கள் செய்யவில்லை. ஆனால், "உண்மையைபேசி உத்தமனாய் நட" என்ற நீதிகற்பனையின்படி ஸ்ரீ ஆஞ்சனேயரருளினால், அன்னன்னவர்களுக்கு வேண்டிய சங்கதிகளுக்கு தகுந்த பதில்களையும், அன்னன்னவர்களின் மாதவாரி புத்திபலன், திசாபுத்திபலன்களையும், அன்னன்னவர்களுக்கு நவக்கிரகரீதியாக ஏறபடக்கூடிய கெடுதிகளை சாஸ்திர ரீதியாகக் கண்டு அவைகளுக்கு விதிபிரகாரம் ஜெபம், ஹோமம், ரட்க்ஷா பந்தனங்களும் (கவசம்) மிகவும் சொற்ப விலைக்கு செய்துக்கொடுக்கின்றோம்.

கட்டண விகிதம்.

5 கேள்விகளுக்கு உண்மையான பதில்களெழுதியனுப்ப	ரூபாய்	1
5 கேள்விகளுக்கு மேற்பட்ட ஒவ்வொரு கேள்விக்கும்	சதம்	25
12 மாதத்திற்கு வரும் புத்தி பலன்களெழுதியனுப்ப	ரூபாய்	2
நல்ல அதிர்ஷ்ட கவசம் (கைக்கண்டது)	ரூபாய்	5

இன்னுமற்றுமுள்ள எவ்வகையான கவசங்களுக்கும் (தாயத்து) கீழ்கண்டவருக்கெழுதவும். வி. பி. பி. மூலியமாய் வரவழைக்க விருப்பமுள்ளவர்கள் முன்பணமாக 50 சதத்துக்குச் சரியான சிலோன் ஸ்டாம்புகள் அனுப்ப மறக்கவேண்டாம்.

சாதகமில்லாதவர்கள், எனக்கு கடிதம் எழுதும்போதுள்ள, வருடம், மாதம், தேதி. சரியான மணி, மினிட்டு, உங்களது முழுப்பெயர், இரவு, பகல், வயது, எல்லாம் கண்டு எழுதுவீர்களாக.

புரோபசர்.

டி. எஸ். கிருஷ்ணசுவாமி ஐயர்,

28, நேப்பியர் ரோடு,

கடலூர். என். டி. (தென்னிந்தியா.)